செ. கு. எண்: 114 நாள்: 16.07.2018

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 16.7.2018

மாலை முரசு தொலைக்காட்சி நிருபர் செல்வி சாலினி அவர்கள் 15.7.2018 அன்று சாலை விபத்தில் காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

மாலை முரசு தொலைக்காட்சி நிருபர் செல்வி சாலினி மற்றும் நண்பர்கள் திண்டுக்கல்லிலிருந்து சென்னைக்கு காரில் வந்து கொண்டிருந்த போது, மதுரை – திண்டுக்கல் ரோட்டில், பொட்டிகுளம் அருகே கார் நிலைதடுமாறி பள்ளத்தில் கவிழ்ந்ததில், காரில் பயணம் செய்த செல்வி சாலினி என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

செல்வி சாலினி அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், மாலை முரசு தொலைக்காட்சி நிறுவனத்திற்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த மாலை முரசு தொலைக்காட்சி நிருபர் செல்வி சாலினி அவர்களின் குடும்பத்திற்கு சிறப்பு நிகழ்வாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**